BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893 An international open access, peer- reviewed, refereed journal

# புலம்பெயர் எழுத்துக்களில் பெண்ணிய நோக்கில் கைம்பெண்டி வாழ்வியல்

முனைவர் கா. சந்தானலெட்சுமி

இணைப்பேராசிரியர், துறைத்தலைவர் - தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சாத்தூர், தமிழ்நாடு, மின்னஞ்சல்: lakshmisanthana617@gmail.com ORCID: 0009-0009-4031-9490

**ஆய்வுச் சுருக்கம்**

பொன்.குலேந்திரனின் (கனடா) சிறுகதைப் படைப்பாக பெண்ணியம் (21 சிறுகதைத்தொகுப்பு அறியப்படுகிறது. 21 பெண்களின் பெயரை தலைப்பாக கொண்டுள்ளது. கதையின் மைய பாத்திரமாக இடம்பெறும் பெண்ணின் பெயரையே படைப்பாசிரியர் கதையின் தலைப்பாக்கி உள்ளமை தனிச் சிறப்பாகும். இக்கதைத் தொகுப்பில் 16வது கதையாக மங்கையம்மாள் என்ற சிறுகதை இடம் பெறுகிறது. அக்கதையில் பழமைத்துவம் மிக்க கோயில் குருக்கள் மகளாக வரும் மங்கையம்மாள், சொந்த தாயகத்தில் கூட்டு குடும்பமாக வாழ்ந்தவர். போரியல் நிலைப்பாட்டால் தனது கணவருடன் கனடா வருகிறார். அங்கு நடக்கும் வாழ்வியல் மாற்றங்கள், 60 வயதில் தனிமை மேலிட, உணவு தயாரித்து வழங்கும் பணி, தேவார பாடல்கள் கற்றுதரும் பணிகளை மேற்கொள்கிறார். இருந்த போதிலும் அவரின் தனிமை எதிர்கால பயத்தை ஏற்படுத்துகிறது. தனிமை போக்க பூங்காவிற்கு உலாவச் செல்லும் போது அவர, வெள்ளைக்கார முதியவர் (மனைவியை இழந்தவர்) சந்திப்பு ஏற்படுகிறது.

ஒருமித்த வாழ்வியல் சூழலில் மனம்விட்டு இருவரும் பேசி நட்பாகி தொடர் சந்திப்பாகும் போது, இதுவரை மங்கையம்மாளை கண்டு கொள்ளாதவர்கள் அனைவரின் கவனத்திற்கும் உரியவராகிறார். பிறரின் புறம் பேசலுக்கான பொருளாக மங்கையம்மாள் - வெள்ளைக்கார முதியவர் நட்பு அமைகிறது. அதனால் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகும் மங்கையம்மாள் சமூகப் பண்பாடு தனி மனித வாழ்வியல் சுதந்திரத்தை பழிப்பதற்கு பயன்படுத்தப் படுவதை எண்ணி வேதனையுறுகிறார். இருந்த போதிலும் அவைகளிலிருந்து விடுப்பட்டு தனது நண்பருடன் அவரது இல்லத்தில் வாழ முடிவு எடுப்பது சிறுகதை கருத்தியல் சிந்தனையாகும். புலம் பெயர் சூழலில் கைம்பெண் வாழ்வியலை இச்சிறுகதை வாயிலாக பெண்ணிய ஆய்வு அணுகு முறையில் இக்கட்டுரை ஆராய விழைகின்றது

**குறிச் சொற்கள் :** புத்திரி, கோலம், பூரிப்பு, புலம்பெயர்தல், ஆசாரம், தியானம், விதவை, புது மனுசி, பழமைவாதி, புதுவாழ்வு

## முன்னுரை

மானுடத்தின் ஒருபாதி சமூகத்தின் சரிபாதி என்று கூறப்படும் பெண்ணினம் பண்பாட்டின் பிரதிபிம்பமாக அறியப்படுகின்றது. மனித இனத்தின் பெருமையையும் நாகரிகத்தையும் யுகங்கள் தோறும் விடாமல் பின்பற்றுபவளாகவும் பாதுகாப்பவளாகவும் பெண்ணே விளங்குகிறாள். தழும்பாகிப்போன சமூகக் கோட்பாடுகளையே தனது தடயமாக்கி வாழ வேண்டியது. பெண்ணின் கட்டுப்பாடு ஆகின்றது. புலம்பெயர்சிறுகதைத் தொகுப்பில் இடம் பெறும் மங்கையம்மாள் என்ற சிறுகதையில் வெளிப்படுத்தப்படும் கைம்பெண்டி வாழ்வியல் பெண்ணிய ஆய்வு அணுகுமுறையில் இக்கட்டுரை ஆராய விழைகின்றது.

**பெண்ணியம் - சிறுகதை தொகுப்பு**

பொன். குலேந்திரனின்(கனடா) சிறுகதை படைப்பாக பெண்ணியம் (21சிறுகதைத் தொகுப்பு) அறியப்படுகிறது. 21 கதைகளும் 21 பெண்களின் பெயரை கொண்டிருப்பது இப்படைப்பின் சிறப்புகளுள் ஒன்றாக கருதப்படுகிறது. "பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத்தருவது மட்டுமல்ல சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும் என்று சார்லஸ் பன்ச் கூறுகிறார்."1 என்பதற்கு ஏற்ப தனிமனித மாற்றம் மற்றும் சமூக மாற்றத்தை முன்னெடுப்பதாக பெண்ணியம் அமைய வேண்டும் என்ற நோக்கில் தனது சிறுகதைகளை பொன். குலேந்திரன் படைத்துள்ளார். எல்லா கதைகளிலும் பெண்ணே மைய கதாபாத்திரமாகும். அக்கதாபாத்திரமே சிறுகதையின் தலைப்பாகிறது. "கண்ணம்மா, சூரியமாலா, வீரலட்சுமி, மங்கையம்மாள், கிறிஸ்டினா, திலகவதி என 21 பெண்களின் பெயர்களே தலைப்பாகி கதையின் மையப்பொருளை விளக்குகின்றது. இந்தக் கதைகள் பெரும்பாலும் உண்மை சம்பவத்தை அடிப்படையாக வைத்துப் புனைவும் கலந்து உருவாக்கப்பட்டவை."2 என்று ஆசிரியரே தன் உரையில் குறிப்பிடுகிறார். "சமூக நீதிக்கான போராட்ட உணர்வுகள் பொதிந்த ஆக்கங்களுக்கு வரலாற்றில் முற்றுப்புள்ளி இல்லை."3 என்ற அளவில் பொன். குலேந்திரன் படைப்பும் வெளியிடப்படுகின்றன.

**மங்கையம்மாள் - சிறுகதை**

பெண்ணியம் சிறுகதைத்தொகுப்பில் 16வது கதையாக மங்கையம்மாள் சிறுகதை இடம் பெறுகின்றது. "விதவை பெண்ணின் அவலத்தை பிராமணப் பெண்ணை மங்கையம்மாள் மூலம் வெளிக்கொணர்கின்றார். தனிமை போக்குவதற்கான கருத்தில் சமூக முரண்பாட்டை மங்கையம்மாளின் உள ஊசலாட்டத்துக்கு ஊடாக காட்டி வயது வந்தாலும் காதல் மலரலாம் என்ற மனித உணர்வுகளின் சங்கமமாகக் கொண்டும் சாதிக்கும் காதலுக்கும் தொடர்புபடுத்தக்கூடாது என்பதையும் நாசூக்காக எடுத்துச் செல்கின்றார்என இக்கதையைப் பற்றிய விமர்சனத்தை பார்வதி கந்தசாமி முன் வைக்கிறார்."4 ஆண், பெண் நட்புறவுக்கு வயது, சாதி, இனம், மொழி, நாடு தேவையில்லை என்பதையே இக்கதை சுட்டுகிறது. திருநெல்வேலி குருக்களின் மகளான மங்கையம்மாள் கணவனின் கொழும்பு வேலை காரணமாக அங்கு குடியேறுகிறாள். போர்காலச் சூழலில் தனது கூட்டுக்குடும்ப வாழ்வினை விட்டு கணவனும் மனைவியுமாக தனித்து கனடா வந்து வசிக்கிறார்கள்.

விபத்தொன்றில் கணவன் இறந்துவிட அறுபது வயதினைத்தொடு மங்கையம்மாள் தனிமை எனும் கொடுமைக்கு ஆட்படுகிறார். அதைத் தவிர்க்க பூங்காவின் இயற்கை காட்சிகளை காண வரும்போது ஜோன் என்ற ஆங்கில முதியவரை சந்திக்கிறார். மனைவியை இழந்தவர் கத்தோலிக்க கிறிஸ்தவர், போலிஸ்காரா;, தற்சமயம் அவரும் தனிமையில் வாழ்கிறார். இருவரும் தனிமையைப் போக்க மனமொத்து கருத்து பரிமாறி பேசிக் கொள்வதை மங்கையம்மாளை சுற்றியுள்ள குடியிருப்பு வாசிகள் வதந்தியாகப் பேசுகின்றனர். இதனால்தான் வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்பைவிட்டு ஜோன் வீட்டிற்குச் செல்கிறாள். ஒன்றான சமையல் தனித்தனி அறைவாழ்வு தனிமை போக்கும் பொழுதுகள் என கதை முடிகின்றது. இக்கதையில் மதம்,இனம், நாடு, மொழி, வயது, மாறுபட்ட வாழ்க்கை சூழல் என அனைத்தும் வேறுபட்ட ஆண் பெண் என்ற இருவரை மனதின் ஒருமித்த கருத்துக்கள் ஒன்றிணைப்பதையே இக்கதை காட்டுகின்றது.

**கூட்டுக்குடும்ப வாழ்வில் மங்கையம்மாள்**

மகளிரை மையப்படுத்தியும் பாலினக் கருத்தாக்கத்தை அகற்றியும் பெண்ணடிமை பெண்ணுரிமை ஆகியவற்றை இலக்கியங்களில் கண்டறிவதும் பெண்ணிய இலக்கியத் திறனாய்வாகும்.'5 மங்கையம்மாள் வாழ்வியல் சூழல் சமூகத்தில் வாழும் எண்ணற்ற பெண்களைப் பிரதிபலிப்பது ஆகும். ஒரு காலத்தில் யாழ் பாணத்தில் தனது பெயருக்கு ஏற்ப அரசி போன்ற வாழ்க்கை வாழ்ந்தவள் யாழ் குடா நாட்டில் உயர்குலமாக கருதப்பட்ட பிராமணக் குலத்தைச் சேர்ந்தவள் என்பது அவள் பெயரில் வெளிப்படுகிறது.'6 மங்கைக்கு திருமணமாகி பத்து வருடங்கள் ஆகியும் குழந்தைப்பேறு இல்லாத நிலையை தனது சகோதரிகளின் நான்கு பிள்ளைகளுக்கான வேலைகளைச் செய்வதிலே மறந்து விட்டிருந்தாள்.

அந்த அளவிற்கு பொதுநல நோக்கில் இவள் இல்லாவிட்டால் வீடே இயங்காது என்ற நிலையிலே வேலையும் உறவுகளின் உறவாடலுமாக தனது கூட்டுக்குடும்பத்தை சிறப்பாக நிர்வகித்து வந்தவள் யாழை விட்டு பிரிய மனமில்லாமல் கனடாவிற்கு புலம் பெயர்கிறாள்.

**கனடாவில் மங்கையம்மாளின் வாழ்வியல்**

தற்போது 60வயதாகும் மங்கையம்மாள் நான்கு வருடங்களுக்கு முன்பு தனது கணவனை இழந்ததால் தனியே அடுக்குமாடி குடியிருப்பில் வாழ்கிறாள். "மங்கையம்மாள் அவள் வாழும் கட்டிடத்தில் மட்டுமல்ல, பக்கத்தில் உள்ள அப்பார்ட்மெண்டுகளில் வாழும் தமிழ்க் குடும்பங்களில் தெரியாதவர்கள் இல்லை. அதற்கு முக்கிய காரணம் மங்கையம்மாளின் சுவை மிக்க மல்லிகைப்பூ இட்லி, மெதுதோசை, வடை, உப்புமா போன்றவற்றோடு சேர்த்துக் கொள்ளும் சட்டினியும் ஆகும்."7 தனக்குத் தெரிந்த சமையலையே தனது பொருளாதாரத்திற்கும் ஆதாரமாக்கிக் கொள்கிறாள். "அக்கா நீயும் அத்தானும் கனடாவுக்கு போனால்"8 தான் "எங்களையும் ஸ்பான்சர்செய்து அழைக்கலாம் என்று மொத்த குடும்பத்தின் நலன் கருதி கனடாவிற்கு புலம் பெயர்ந்தவள்."9 இப்போது 9வது மாடியிலிருந்து வீதியின் வழியில் போகும் குடும்பத்தார்களை பார்த்து தன் தனிமை போக்க வேண்டியுள்ளது. "கலகலப்பான வாழ்க்கை நினைவிற்கு வந்துவிடும் கண்களில் நீர்முட் கொள்ளும்."10 வாழ்ந்த சூழல் மாறும்போது தனித்து இயங்கும் பெண்கள் தனக்கான மாறுதல்களை தானே முன்னெடுக்க வேண்டும். உணர்வுகளை பகிரவும் தேவைகளை நிறைவேற்றவும் இணையான துணைகள் வேண்டும். "ஒரு குடும்பத்தை வளர்ப்பதற்கும் நாகரிகங்களை வளர்ப்பதற்கும் ஒரு பெண்ணே சமுதாயத்தில் மூலாதாரமாக இருக்கிறாள்."11 என்பதற்கு மங்கையம்மாளின் வாழ்வே சிறந்த சான்றாகும். யாழில் அவள் கட்டமைத்த கூட்டுக்குடும்பமும் கனடாவில் அவள் தகவமைத்து கொண்ட குடும்பமும் சமுதாயத்தின் பரிணாமங்களைக் காட்டுகின்றன.

**தனிமை தரும் பயமும் வெறுமையும்**

"தனிமை அவள் மனதில் பயத்தை உண்டாக்கியது."12 மங்கையம்மாளை எந்நேரமும் தனிமையும் பயமும் வாழ்க்கையின் வெறுமையும் சூழ்ந்து கொண்டன. இதிலிருந்து மீள்வது எப்படி? சுகவீனம் ஏற்பட்டால் என்ன செய்வது என பல்வேறு சிந்தனையோட்டம் மன அமைதியின்மையை ஏற்படுத்துகிறது. இத்தகைய சூழலில் அவளைப் பற்றி சிந்திக்க அடுக்குமாடி குடியிருப்பில் யாரும் இல்லை. தங்கள் ஆர்டருக்கான உணவைப் பெறுவதோடு அவர்களின் வேலை முடிந்துவிடும். கணவன் இல்லாத விதவை, யாருமற்ற தனியாள் என்ற பாவமான கருணைப் பார்வையோடு மங்கையம்மாள் பார்க்கப்பட்டாள். சமூக கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு தனது கைமைத்தன்மையை தனிமையோடு கடக்கும் பெண் என்ற எண்ணமே அனைவரிடமும் இருந்தது. தனிமையை நீக்க தியானம் மற்றும் படைப்பாக்கத்தில் ஈடுபட்டவள் இயற்கையை ரசிக்க பூங்காவிற்கு வருகிறாள். இந்த வெளி உலக பிரவேசிப்பு அவளுக்கு ஜோனின் அறிமுகம் தந்தது.

**பெண்ணின் சுயமும் சமூகத்தின் பயமும்**

பூங்காவில் தொடர்ந்து மங்கையம்மாள் சந்திக்கும் ஜோன் கத்தோலிக்க கிறிஸ்துவர். மனைவியை இழந்த போலிஸ்காரர். மனைவி இறந்தபின்பு சர்ச் போவதை நிறுத்தி விட்டேன் என்று ஜோன் கூறுவதிலிருந்து அவர்களுடைய இல்லறத்தின் சிறப்பும் தெரிய வருகின்றது. ஒருமித்த கருத்துக்களும் அன்பு புரிதல்களும் இவர்களின் பழக்கத்தை தொடரச் செய்கிறது. "இதென்ன விதவை பிராமணப் பெண்ணுக்கு வெள்ளைக்காரனோடு காதல் வேறா இதுக்கா ஊரிலே இருந்து கனடாவுக்கு வந்தவ என்று வதந்திகள் பேசியவர்கள்"13 தங்கள் உணவிற்கான ஆர்டர்களையும் நிறுத்தத் தொடங்கினர்.

பெண்ணின் சுயம் வெளிப்பட்டால் சமூகம் பயம் கொள்கிறது. சமூக கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு உணர்வு கைதியாக வாழும்போது உத்தமி, கற்புக்கரசி என்று பாவிக்கப்படுபவள் தனக்கான வாழ்வியல் சுதந்திரம் தேடி சற்று முன்னெடுப்பிலும் 'பாவி' ஆக்கப்படுகிறாள். பெண்ணின் வாழ்வியல் சுதந்திரம் மட்டுமே நாகரிகத்தை பாதிக்கும் என்பதையே சமூகம் காலம் காலமாக கற்பித்து வருகிறது. வாழ்வில் மெய்மைகளே சமூக மேன்மைக்கான அடையாளமாக்கப்படுகிறது.

பெண்ணின் சுயம் வெளிப்பட்டால் சமூகத்தின் அடையாளம் மாறிவிடும் என்ற பயம் அனைவரிடமும் உள்ளது. எல்லை மீறும் பெண்கள் கொல்லைப்புற கள்ளியாக ஒதுக்கப்படுகிறார்கள். "நான் தனிமையாக இருக்கும்போது என்னை கவனிக்காதவர்களுக்கு, இப்போது அப்படி என்மேல அக்கறை மங்கை சிலரிடம் சொல்லி முறைப்பட்டாள்."14 சுயத்தோடு பெண் வாழ முற்பட்டால் அவளை கண்காணிக்க விமர்சிக்க தண்டிக்க சமூகமே முன் வருகிறது. ஆனால், ஆணின் சுயம் வெளிப்பட்டால் அதனை அவனது ஆளுமையாக சமூகம் கொண்டாடுகிறது. 'எறும்பு ஊற கல்லும் தேயும்' என்பதனைப் போலவே பல பெண்களின் சுய முன்னெடுப்பு தியாகங்களால் தான் இன்று பெண்கள் வாழும் இந்த வாழ்க்கைச் சூழல் கிட்டியுள்ளது என்பதே வரலாற்று உண்மையாகும்.

'மங்கையும் ஜோன் வீட்டில் புதுவாழ்வை தனித்தனி அறைகளில் ஆரம்பித்தனர். ஒன்றாகவே சமைத்து அவர்கள் வெளியே போய் உலாவி வந்தார்கள். உண்டார்கள். அவர்கள் இருவரது தனிமை படிப்படியாக மறைந்தது.'

உறவு என்பது உடல் சம்பந்தப்பட்டது மட்டுமல்ல ஒருமித்த உணர்வுகளின் சங்கமத்தால் வருவது என்பதை மங்கையம்மாள் - ஜோன் உறவாடல் மூலம் அறிய முடிகின்றது. புலம் பெயர்சூழலிலும் புரையோடிப் போன சமூகத்தின் முடிச்சுகள் அவிழ்க்கப்படாமலே உள்ளன. தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் மனித இனம், சமூகப் பண்பாட்டு நிலையில் பெண்ணின் சுயத்தை மாற்றிக் கொள்ள விடுவதில்லை.

விதவை என தனியாளாக இருந்தாலும் அவளுக்கான உறவுகளை தேர்ந்தெடுக்கும் உரிமை அவளுக்கு மறுக்கப்படுவது, காலந்தோறும் நிகழ்ந்து வருகின்றது. ஊடகங்களில் வெளிப்படும் மாற்றங்கள் மற்றும் பல காரணிகளால் சமூக மாற்றத்திற்கான முன்னெடுப்புகள் தொடர்ந்து நடந்து வருவதையே மங்கையம்மாள் சிறுகதை சமூகத்திற்கு தரும் விடயமாகும்.

**முடிவுரை**

மொழி, இனம், இடம், மதம் என பல்வேறு சூழல்களைச் கடக்கும் கைம்பெண்டி புலம் பெயர்சூழலிலும் சமூக கைதியாகவே பாவிக்கப்படுகிறார்கள் என்பதை இந்த ஆய்வு மங்கையம்மாள் சிறுகதை வாயிலாக தெளிவுபடுத்துகிறது. பெண் தன்னளவில் செய்யும் சுய தேடல்களே சமூகத்திற்கான மாற்றுத் தேடலுக்கான முன்னெடுப்புகளாக அமைவதே வரலாற்று நிகழ்வுகள் காலந்தோறும் மானுடத்திற்கு உணர்த்தி வருகின்றன என்பதை இந்த ஆய்வின் வாயிலாக அறிய முடிகின்றது.

**குறிப்புகள்**

1. பொன். குலேந்திரன், பெண்ணியம், ப.6
2. மேலது, ப.5
3. மேலது, ப.14
4. மேலது, ப.12
5. கதிர்மகாதேவன், இரா. மோகன் (ப.ஆ), பெண்ணியம் ப.77
6. பொன். குலேந்திரன், பெண்ணியம், ப.159
7. மேலது, ப.158
8. மேலது, ப.163
9. மேலது, ப.162
10. மேலது, ப.159
11. கோ. கவிதா வே. சரிதா (ப.ஆ), தமிழ் இலக்கியங்களில் பெண்கள், ப.318
12. பொன். குலேந்திரன், பெண்ணியம், ப.165
13. மேலது, ப.174
14. மேலது, ப.175
15. மேலது, ப.176

**பயன்பட்ட நூற்கள்**

1. கதிர் மகாதேவன், இரா.மோகன் (ப.ஆ), பெண்ணியம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், தமிழியற்பள்ளி வெளியீடு, 1994
2. கவிதா, கோ., வே. சரிதா (ப.ஆ), தமிழ் இலக்கியங்களில் பெண்கள், பாரதி புக் ஹவுஸ், வேலூர், முதற்பதிப்பு 2023
3. குலேந்திரன், பொன்., பெண்ணியம், மின்கவி வெளியீடு, கனடா, முதற்பதிப்பு மே 2019